Regd. No. M. 5458 விலை அணா ஒன்று இலங்கை 10 சதம்

மாலை மணி

(திராவிடர் தமிழ்த் தினசரி கருத்திதழ்)

'MALAI MANI" Tamil Daily

ஆசிரியர்: மு. கருணாநிதி

Telephone: No 4502

"மாலை மணி"

சந்தா விபரம்

ஆண்டொன்றுக்கு ரூ. 24-0-0
ஆறு மாதத்திற்கு ரூ. 12-0-0
மூன்றுமாதத்திற்கு ரூ. 6-0-0
ஒரு மாதத்திற்கு ரூ. 2-2-0
சென்னைக்குமட்டும் ரூ. 2-0-0

"மாலை மணி"

விளம்பர[illegible]

ஒரு அங்குலம் ஒரு பத்திற்கு ரூ. 5.

நீடித்த விளம்பரங்களுக்கு விண்ணப்பித்துக்கொள்ளவும்.

மானேஜர்

மலர் 3 சென்னை 22-12-51 சனி ★ வெளியூர் 23-12-51 ஞாயிறு மணி 132

[illegible] அறிவாலயம், 25/6, திருவள்ளுவர் குடியிருப்பு, கலைஞர் கருணாநிதி நகர், சென்னை-[illegible] "மாலை மணி"

★ உருப்படாத நீர்ப்பாசனத் திட்டம் ★

ஏட்டளவில் உள்ள புள்ளி விவரங்கள்

விவசாயிகளின் துயரம் அதிகரிக்கிறது

வெட்டப்பட்ட கிணறு 58000

நீர்ப்பாசன வசதி சம்பந்தமாக மந்திரியார் கொடுத்துள்ள புள்ளி விவரங்களை அப்படியே கீழே தந்துள்ளோம்—விவசாய அபிவிருத்திக்கு நீர்ப்பாசன வசதி மிக மிக முக்கியமாகும். ஆனால் [illegible] அளவுக்குத்தொல்லைகள் விவசாயிகளுக்கு [illegible] அளிக்கப்படும் [illegible] காலத்தில் பலன் கிட்டாது [illegible] நமதுபுள்ள நாட்டு மக்கள் நலிந்து போவது உண்மை எண்ணிக்கையில் கிணறு வெட்டும் புள்ளி விவரம் மட்டும் போதாது. வெட்டப்படும் கிணறுகள், தேவைப்படும் விவசாயிக்கு உபயோகப்படுவதாக இருக்கவேண்டும்.

சென்னை, டிச 21—

ரெவின்யூ மந்திரி தோழர் எச் சீதாராம ரெட்டி நேற்று நிருபர்கள் கூட்டத்தில் பேசுகையில் சர்க்காரின் கிணறு மான்ய திட்டத்தினால் ஏற்பட்டுள்ள பலன்களை எடுத்துரைத்தார் அவர் கூறியதன் சாரமாவது:—

பல்வேறு கிணறு மான்யத் திட்டங்களின்படியும் கிணறுகளை வெட்டி முடிப்பதற்கான கடைசித் தேதி 1952 ஜூன் 30 வரை நீடிக்கப்பட்டுள்ளது 1948 49-லிருந்து 1951 அக்டோபர் முடிய பல திட்டங்களின்படியும் மொத்தம் 74000 கிணறுகளுக்கு மான்யப் வழங்கப்பட்டன (லட்சிய அளவு 77000 கிணறுகள்) இதில் 15,519 கிணறுகளில் வேலை ஆரம்பமாகவில்லை பாதிக்கிணறுகள்வெட்டி முடிக்கப்பட்டுவிட்டன: அல்லது கட்டப்பட்டு வருகின்றன. 1951 ஏப்ரலிலிருந்து பூர்த்தியான கிணறுகளினால் 24 364 ஏக்கர் நிலம் சாகுபடிக்கு வந்துள்ளது.

1949 ஏப்ரல் முதல் தேதியிலிருந்து 1951 நவ. 15 தேதி முடிய 6862 பம்பு செட்டுகள் நிறுவப்பட்டுள்ளன. (லட்சிய அளவு 12,983 செட்டுகளாகும்) இதனால் 22,359 ஏக்கர் நிலம் சாகுபடிக்கு வந்துள்ளது, 1949 ஏப்ரலிலிருந்து 1951 நவ. 15 ம் தேதிவரை அனுமதிக்கப்பட்டுள்ள மாராமத்து வேலைகளின் தொகை 2757 அதில் நவம்பர் மத்திவரை 960 வேலைகள் பூர்த்தியாகிவிட்டன. இதனால் மொத்தம் 9251 ஏக்கர் சாகுபடிக்கு வந்தது

மராமத்து இலாகாவின் பாசனத் திட்டங்களின்படி மேலே கண்டுள்ள காலத்தில் 201 திட்டங்கள் பூர்த்தியாயின, 64452 ஏக்கர் நீர்ப்பாசனம் பெற்றது. மராமத்திலாகா திட்டங்களுக்காக அனுமதிக்கப்பட்டுள்ள மொத்தத் தொகை ரூ 84 லட்சத்தில் இதுவரை சுமார் ரூ 39-முக்கால் லக்ஷம் செலவாகியுள்ளது.

மொத்தம் 268 யந்திரக் கலப்பைகள் உள்ளன. (லட்சிய அளவு 326) தென் ஆற்காடு ஜில்லாவில் 17 குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. (லட்சியம்: 20) 88 ஊற்று (ஆர்டீஷன்) கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. (லட்சியம்: 101)

எல்லா நீர்ப்பாசனத் திட்டங்களின் மூலமாகவும் இவ்வருஷம் ஏப்ரல் முதல் நவ. 15-க் தேதி வரை மொத்தம் 1,41,589 ஏக்கர் நீர்ப்பாசனத்திற்கு வந்தது. (லட்சிய அளவு: 8 லக்ஷம் ஏக்கருக்கு சற்று அதிகம்)

சமாதானப் பிரச்சினை

இளைஞர்களுக்கு திருமதி ரூஸ் வெல்ட் யோசனை

பாரிஸ் டிச 18—

சமாதானம் ஆயுதக்குறைப்பு என்ற பெரிய பிரச்னைகளை தெளிவாக அறிந்துக்கொள்ளும்படிச் சுதந்தர உலகின் இளைஞர்களுக்கு திருமதி பிராங்லின் டி. ரூஸ்வெல்ட் அறிவுறுத்தினார் நமபைப் பிளவு படுத்தும நோக்கத்துடன் நடக்கும் பிரசாரத்தின் துர்நோக்கத்தை வெளிப்படுத்த" தீவிர முயற்சி செய்யுமாறும் அவர் கோரினார்,

திங்களன்று இளைஞர் கூட்டமொன்றில் அத்தலைவி பேசுகையில்" உலக மக்கள் விரும்புவது உண்மையான சமாதானமே தவிர சமாதான 'உடன்பாடு ஒன்று மூலம் வெறும்வார்த்தைகளை அல்ல" வென்றார்.

அவர் மேற்கொண்டுரைத்ததாவது' [illegible] திடீர் தாக்குதலை [illegible] முன் [illegible] இருக்கும்.

அணுசக்தி கட்டுப்பாடு, அணுசக்தி ஆயுதங்கள் தடை என்ற இப்பிரச்னையைத் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும் சோவியத் பிரசாரத்தால் ஏமாற்றமடையாதிருப்பதற்கு அது அவசியமென்றார் திருமதி ரூஸ்வெல்ட்.

ஐக்கிய நாடுகளில் பெரும்பாலானவை ஏற்றுக்கொண்ட அணுசக்தி கட்டுப்பாடு திட்டமானது அணுசக்தியைச் சர்வதேச நிர்வாகத்திடம் ஒப்படைக்க இணங்குமபடி சோவியத் யூனியனை அழைக் கூவுகிறது. எந்த நாடும் அணுகுண்டுகளை உபயோகிக்கக் கூடாதென்று ஏட்டளவில் உடன்பாடு செய்து கொண்டாலே போதுமென்று சோவியத் யூனியன் கூறுகிறது. அந்த உடன்பாட்டில் கையெழுத்திட்ட பிறகு, யாரிடம் 'அணுகுண்டுகள்' இருக்கின்றன என்று கண்டுபிடிக்க சோதனை ஏற்பாட்டைத் தீர்மானிக்கலாமென்றும் சோவியத் யூனியன் கூறுகிறது. ஆனால் சமாதான கால உபயோகத்திற்கு' என்ற அடையாளமுள்ளனவற்றைக் கண்டுபிடிக்க இன்ஸ்பெக்டர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

இந்தச் சோவியத் பிரேரணையால் எவ்வித பாதுகாப்பும் இல்லை யென்பதைப் புரிந்துகொள்ள வேண்டுமென்றார்.

"குண்டுகள் தயாரி[illegible]

ஐ நா அணுசக்தி கட்டுப்பாட்டுத் திட்டப் பிரகாரம் ஒவ்வொரு நாடும் சமாதான கால திட்டங்களுக்கு எவ்வளவு அணு சக்தியை உபயோகிக்கலாமென்ற வரையறை உண்டு; சர்வதேச நிர்வாக ஸ்தாபனத்திடமிருந்தே அணுசக்தியானது கிடைக்குமென மும தோழியர் ரூஸ்வெல்ட் கூறினார்.

விமானங்கள் செய்யும் சப்தத்தினால் சுவர்களில் பிளவு

லண்டன் விமான இலாகா மந்திரிக்குப் புகார்

லண்டன், டிச 22—

லண்டன் விமான நிலையத்திற்கு அருகாமையிலே குடியிருக்கும அனேக விமானங்கள் அடிக்கடி செல்லும் சப்தபானது வீடுகளின் கூரையிலும், சுவர்களின் அனேக பிளவு ஏற்படுத்துவதற்கு காரணமாயிருக்கின்றது என்று பிரிட்டிஷ் விமான இலாகா மந்திரிக்கு புகார் செய்திருந்தனர்.

இதைத்தவிர்ப்பதற்கு சுவர்களின் மீது எஃகு அல்லது மற்றொரு ஏதாவது உலோகத்தினால் செய்யப்பட்ட தகடுகளை அடித்து வைத்து பரிசோதனை செய்ய இவ்விலாகா அதிகாரிகள் யோசனை செய்துள்ளனர்.

ஓரிடத்தில் மட்டும் இப்பரிசோதனை சென்ற ஆறுமாதம் களாக நடைபெற்று வருகின்றதாம். பிரிட்டனிலுள்ள இதர விமான நிலையங்களிலுள்ள அதிகாரிகள் இதை தங்களிடத்திலும் செய்ய வேண்டுமா என்பதைக் குறித்து யோசனை செய்து வருகின்றனர்.

உலகிலே மிகவும் நிறையுள்ள குழந்தை

லண்டன், டிஸ் 22—

உலகிலே மிகவும் நிறையுள்ள பிறந்த குழந்தை 14 பவுண்டு இருக்கிறது. சாதாரணமாய் பிறந்த குழந்தையைக் காட்டிலும் இதன் நிறை இரண்டு மடங்கு அதிகம், டெர்பியில் பிறந்துள்ள இதன் பெயர் ராபர்ட் ஆர்தர் பிறப்பதற்கு முன்பே இவன் தாயாரை பரிசோதனை டாக்டர்கள் இவன் நிறைஅதிகரித்திருக்கும் என்று கூறியுள்ளனராம்.

[illegible]

அஜாக்ரதையாகக் கார் ஓட்டியதாக

சென்னை, டிச. 21—

டிசம்பர் 18-ந் தேதி காலை மவுண்டு ரோடில் தேனாம்பேட்டைக் கருகில் வேகமாகவும், அஜாக்கிரதையாகவும் காரை ஓட்டி ஒரு ஸ்திரி குழந்தையின் மரணத்துக்கு காரணமாயிருந்ததாக சர்க்கார் பிராஸிகூடர் கோவிந்த ஸ்வாமிநாதன் மீது இன்று பிற்பகல் எழும்பூர் பிரதம மாகாண மாஜிஸ்திரேட் முன்பு போலீசார் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்தனர்.

இ பி. கோ. 804 (எ) பிரிவின் கீழும் மோட்டார் வாகனச் சட்டத்தின் 116 வது பிரிவின்கீழும் அவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

டிசம்பர் 13-ந் தேதி காலை சுமார் ஆறேகால் மணிக்கு கோவிந்த ஸ்வாமிநாதன் மவுண்டு ரோடில் தேனாம்பேட்டைக் கருகில், வடகிழக்கு தென்மேற்கு திசையில் அவசரமாகவும் அஜாக்கிரதையாகவும் பொது ஜனங்களுக்கு அபாயம் ஏற்படும் வகையிலும் கார் ஓட்டிச் சென்றதாகவும் அவ்வமயம் ரஸ்தாவை அநேகமாக குறுக்கே கடந்து சென்ற நிறைந்த கர்ப்பிணியான கண்ணம்மாள் என்ற ஸ்திரி மீது கார் மோதியதாகவும், இதன் விளைவாக அந்த ஸ்திரீயின் இடது கால் துண்டிக்கப்பட்டு ஸ்திரி ரஸ்தாவில் எறிந்து விழுந்ததாகவும் குற்றப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இம்மோதலின் காரணமாக ஸ்திரீயின் வயிற்றிலிருந்த சிசு வெளியே உகுத்தப்பட்டதாகவும் தெருவில் எறியப்பட்ட அக்குழந்தை 15-ந் தேதி மன்று எழும்பூர் பிரசவ ஆஸ்பத்திரியில் மரணமடைந்ததாகவும் இத்தியாதி காரணங்களினால் எதிரி இ. பி. கோ. 304 (எ) பிரிவின் கீழும், மோட்டார் வாகனச் சட்டத்தின் 110 ஷரத்துக்கிழ் [illegible] றம் செய்திருப்பதாகவும் [illegible] பிடப்பட்டுள்ளது.

எதிரிக்கு சம்மன் அனுப்பும்படி மாஜிஸ்திரேட் உத்தரவிட்டார். வழக்கு ஜனவரி 11-ந் தேதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

அறிக்கை

ஏஜெண்டு தோழர்கள் அதிகமான பிரதிகள் வேண்டுமென கடிதம் எழுதும்போது, அதற்கான டிபாசிட் தொகையும் சேர்த்து அனுப்பப் பட்டவர்களுக்கு மட்டும் பிரதிகள் அனுப்பப்படும்.

மானேஜர்

மலேய சுப்ரீம் கமாண்டர்

ஆர். ஜி பர்க் நை?

லண்டன் டிச 22—

முன்னாள் சென்னை கவர்னரும், இப்பொழுது பிரிட்டிஷ் ஹைகமிஷனரான சர் ஆர் ஜி மாக்டொனல்ட் மலேயாவின் சுப்ரீம கமாண்டர் பதவி வகிக்கலாம் என்று "தி டெய்லி மெயில்" என்ற பத்திரிகை இன்று இங்கு கூறியிருக்கிறது.

பிலீம் உற்பத்தி செய்வல் இந்தியாவிற்கு இரண்டாவது ஸ்தானம்

லண்டன் டிச 21—

யு. எஸ். ஏவிற்கு அடுத்தார் போல் இந்திய உலகத்தில் பிலீம் உற்பத்தி செய்வதில் இரண்டாவது ஸ்தானம் வகிக்கின்றது என்று இங்கு கணக்கிடப்பட்டிருக்கிறது.

தங்கம் [illegible]

[illegible] டிச. 22—

[illegible] மார்க்கெட்டுகளில் [illegible] வெம்பர் 29-க்கு பிறகு தங்க விலை அதிகரித்து வந்தன; இப்பொழுது குறைந்து வருகிறதாம். மீண்டும் விலை ஏறப்புது வருஷத்திற்கு முன்பு அதிகரிக்கும் என்று இங்கு எதிர்பார்க்கிறது.

கிராமங்கள் தொழில் மயமாக்கத் திட்டம்

சர் விச்வேச்வாய்யா கருத்து

பங்களூர் டிஸ் 19—

கிராமங்களைத் தொழில் மயமாக்குவது பற்றி தாம் தயாரித்துள்ள திட்டம் குறித்து இன்று சர் எம். விச்வேச்வரய்யா பைசூர் வர்த்தக சபை அங்கத்தினர்களோடு விவாதித்தார்,

இத்திட்டம் பங்களூரிலும் கோலாரிலும் நடைபெற்று வருகிறது. கிராமங்களிலுள்ள தொழில்களில் உற்பத்தியையும் வருமானத்தையும் பெருக்குவது இதன் நோக்கம் ஒவ்வொரு கிராமத்தையும் சுயதேவையைப் பூர்த்தி செய்து கொண்டு நிர்வகிக்கும்படி செய்ய வேண்டுமென்பதும் இதன் உத்தேசம் மைசூர் சர்க்கார் ரூ 4½ இலட்சம் மான்யமாக இதற்கு அளித்திருக்கிறார்கள் மேலே குறிப்பிட்ட ஜில்லாக்களிலுள்ள கிராம மக்கள் ரூ 4 லட்சம் கொடுத்திருக்கின்றனர்

5 மாதமாக இத் திட்டம் நடைபெறுவதாயும் ரூ 3½ லட்சம் பெருமான சாமான்கள் இவ்விடங்களில் உற்பத்தியாகி இருக்கின்றன வென்றும் மாதம் ரூ 10 லட்சத்துக்கு ஒவ்வொரு ஜில்லாவும் உற்பத்தி செய்யவேண்டுமென்பது திட்டம் எனவும் இந்த அடிப்படையில் இதர ஜில்லாக்களிலும் இதைக் கொணர்ந்தால் வருஷம் ரூ 15 கோடி வருமானம் கிட்டலாமென்றும் சர் விச்வேச்வரய்யா தெரிவித்தார்.

சிமிட்டிக் கற்கள் சாணத்திலிருந்து எரிவாயு, அச்சுவார்த்தகள் முதலிய உற்பத்தி தொழில்களை எடுத்துக்கொள்ளலாமென வர்த்தக சபை மெம்பர்கள் யோசனை கூறினர்.

காங்கிரஸ் பிற்போக்குக் கட்சியாகி விட்டது

பிரிட்டன் பிரான்சுக்குச் சலாமிடுகிறது

ஜலந்தர், டிச 21—

காங்கிரஸ் 1912-ல் புரட்சிகரமான கட்சியாக இருந்தது ஆனால் இன்று அப்படி இல்லை என்று இன்று ஒரு பொதுக் கூட்டத்தில் தோழியர் அருணா அசப் அலி கூறினார்.

அவர் மேற்கொண்டு கூறியதாவது:—காங்கிரஸ் ஒரு பிற்போக்குக் கட்சியாகிவிட்டது ஏனெனில் அதனுடைய கொள்கைகள் யாவும் பிரிட்டனிலும் அமெரிக்காவிலும் உருவாக்கப்படுகின்றன. இந்தியா அண்மையில் சுதந்திரமாக இல்லை ஏனென்றால் இன்றும் அது அமெரிக்கா, பிரிட்டன் போன்ற அன்னிய நாடுகளின் செல்வாக்குக்குக்கீழ் படிந்தே இருக்கிறது

தோழியர் அருணா ஆசப்பலி இங்கு கம்யூனிஸ்டுகளின் தேர்தல் பிரசாரத்துக்கு வந்தார். அவர் காங்கிரசை வசைபாடியதோடு நிற்காமல் சோஷலிஸ்டுகளையும் வசைபாடினார்.

கம்யூனிஸ்டுகள் அமெரிக்கா பிரிட்டன் உறவை ரத்து செய்யுமென்று கூறினார்.

ஹார்பர் பகுதி தி. மு. க. தேர்தல் குழு

25-12-51 செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு சென்னை தங்கசாலைத் தெரு 202 எண் இடத்தில் ஹார்பர் தி. மு. க. தேர்தல் குழுவின் கூட்டம் நடைபெறும் மேற்படி கூட்டத்திற்கு பெத்துநாயகன் பேட்டை ஏழுகிணறு, அம்மன் கோயில், முத்தியால்பேட்டை, கச்சாலீஸ்வரர் அக்ரகாரம், சௌகார்பேட்டை, கொத்தவால்சாவடி முதலிய ஹார்பர் பகுதியைச் சேர்ந்த தி மு க செயலாளர்கள் தி மு க உறுப்பினர்கள், அனுதாபிகள் எல்லோரையும் தவறாமல் வருமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

அன்று திமுக ஆதரவுபெற்ற தோழர் கே. மஹமத் இப்ராஹிம், எம் பி. உடன் ஆவர்களுக்கும் தோழர் பி பாலசுப்ரமணியம் பி ஏ பி எல், அவர்கட்கும் ஆதரவு திரட்டுவதற்கான வேலைத்திட்டம் வகுக்கப்படும்

காஞ்சி மணிமொழியார்

அமைப்பாளர்

இந்தியா 8 கோடி காலன் கெரோஸின் இறக்குமதி செய்துள்ளது

புதுடில்லி, டிச 22—

சென்ற ஜூலை, ஆகஸ்டில் இந்தியா 8 28,00,000 காலன் கெரோஸின இறக்குமதி செய்துள்ளது. இதில் 5,05,00 000 காலன் பாரசீகத்திலிருந்து இந்தியா பெற்றுள்ளது. சப்ளை செய்துள்ள இதர நாடுகள்:—சௌதி அரேபியா 63,00,000 காலன்; பஹ்ரின் தீவுகள் 1,55,00,000 காலன், சுமத்திர-37,00,000 காலன்.

பெண்மலைப்பாம்பிற்கு ஆபரேஷன்

லண்டன், டிச. 22—

லண்டன் மிருக காட்சி சாலையிலுள்ள 10 அடி நீளமுள்ள பெண் மலைப்பாம்பு கழுத்தில் ஆபரேஷன் செய்யப்பட்டது

இப்பாம்பிற்கு "ஸீ" என்ற பெயர் மிருகக்காட்சி அதிகாரிகள் வைத்துள்ளனர்.

இதை ஒரு பாதிரி வளர்த்து வந்தார், இவர் மடத்தில் வசித்து வந்த இதர பாதிரிகள் இதை வளர்ப்பதை விரும்பவில்லை. அவர்களின் வேண்டுகோளுக் கிணங்க 1944-ல் இவர் இதை லண்டன் மிருகக் காட்சிசாலைக்கு அளித்துவிட்டார்.

தெருக்களை கடந்து செல்லும்பொழுது விபத்து

370 பேர்கள் மரணம்

நியூயார்க், டிச. 22—

சென்ற 11 மாதங்களில் நியூயார்க் தெருக்களை கடக்கும பொழுது விபத்துக்குள்ளாகி மரணமடைந்தவர்கள் 870 பேர்கள்; சென்ற வருஷம் 392 பேர்கள் மாண்டனர். பாதசாரிகள் ரஸ்தாக்களில் செல்வதற்கும் இவைகளை கடந்து செல்வதற்கும் விசேஷ ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நாகபுரியில் மில் அடைப்பு

நாகபுரி, டிச 19—

சென்ற மாதக் கடைசியிலிருந்து அடிக்கடி வேலை நிறுத்தங்கள் நடந்ததாலும் இரவுநேர தொழிலாளருக்கு மிடையேயே சதர் சச்சரவுகளுமுண்டதாலும் எம்ப்ரஸ் மில் நேற்று மூடப்பட்டது: சுமார் 17 ஆயிரம் தொழிலாளர் அதில் வேலை செய்து வந்தனர்.

மா[illegible]ணி
23—12—51 சனிக்கிழமை

திண்டிவனம் தீரர்நாள்!

திராவிடத் தனியரசு பெறுவதற்கான நம் போராட்டத்திலே குறுக்கே வந்து கொடி நாட்டப் பார்க்கிறார் கோயங்கா! வடநாட்டுச் சீமான வட்டிக்கடை வைத்து வண்டமிழ் நாட்டை வரண்ட நாடாக்கிய வஞ்சகர்களின் பிரதிநிதி தமிழரின் தாள்பிடித்துக் கிடந்த நிலைபோய், தமிழரிடம் தாளபடித்துத் தமிழரை தாழ்வுறச் செய்ய முயர்க்கத்தன தூதுவர் திராவிடத்தலே திராவிடமறவர் நிலைடோள் தேய்ந்துவிடாமல் இருக்கிற நேரத்திலே திண்டிவனம் பகுதியிலே திருக்குறள் முனிசாமியை எதிர்த்துபோட்டி முழக்கம் செய்து வருகிறார்!

சங்கத்தின் குகையிலே சிறுநரிகள் செங்கோல் செலுத்தடக் காணுகிறோம். அந்தக் கோலமுத்தனம் மறைவதற்கான முயற்சியிலே தீரத்தராவ டர் பலர் பணிபுரிந்திடும் காலத்திலே கோயங்கா பிரவேசிக்கிறார். தனமணி மூலம் திராவிடத்தை மேய்த்திடும் திராவிடத்தின் நிரந்தரப்பகைவர்களின் தளபதிகளிலே ஒருவர் திண்டிவனத்திலே மறைமுரசம் கொட்ட வீரவிருத்தம் பாடமுனைகிறார். என்றால் இந்த வடப் பெரிய தொருசேர்தக் காலம் வீராக்[illegible] வாமேவ[illegible]

[illegible] விசயர்கள் தலையிலே கல்லேற்றி இழுத்துவந்தான் பழைய நாள் தீரன்!

அந்தக் கனக விசயர் பரம்பரை, திராவிடத்தை மோசக்கிவருகிறது, சேரன் பரம்பரையை ஒதாக்கிடுக! சொந்தப் பத்தா[illegible] பலம்! சுற்றுச் சுற்றி வேலை செய்யும் பத்தா[illegible] தயோகஸ்தர்களின் பிரச்சாரம்! அந்தப் பிரசாரகர்களை சமதேகிக்கும் அவர் பின்னே மறைந்து மறைந்து வேவு பார்த்து வேலை செய்யும் மார்வாரிகள்! இப்படி நடக்கிறது தேர்தல் போர் திண்டிவனத்திலே!

திண்டிவனம் தொகுதியிலே இருப்பவர்கள், [illegible] அல்ல! "அவன் புசிக்க வல்லாய [illegible]" என்ற புரட்சி கீதத்தை மறந்துவிட்டவர்கள் அல்ல! [illegible] போடுவதை [illegible] ஒட்டும், திராவிடர் வாழ்வுக்கு [illegible] என்பதை திண்டிவனம் தொகுதி மறந்துவிடக் கூடாது!

ஆலை அரசர்கள் வடநாட்டில்! அரசியல் தலைமை வடநாட்டிலே; ஆட்சிக்கால் வடநாட்டிலே; இவ்வளவு பிடியையும் வைத்துக் கொண்டிருக்கிறது வடநாடு, செக்கிழுத்த தேசிய சிதம்பரத்தாருக்கு [illegible] தராத வடநாடு, [illegible] குமரனை [illegible] வடநாடு, [illegible] வளர்ப்பு [illegible] புகழ் பாடா[illegible] வடநாடு, திராவிடத்தமிழ் [illegible] அம்பட்ச கலரியும்

[illegible] நீறத்திலைத்து, திராவிடத்தின் ஏமாளித்தனத்தை எடை போட்டுப் பார்க்க தீர்மானித்து விட்டது! திருக்குறள் முனிசாமி, தி. மு. கழகத்தின் ஆதரவு பெற்றவர். திராவிடத் தனியரசு பிரச்னையிலே அக்கரை கொண்டவர்! அவருடைய வெற்றி திராவிட நாட்டுப்பிரச்னையின் வெற்றி!

தி. மு. கழக மதுரை தீர்மானத்தின் வெற்றி!

கோயங்கா வீழ்ந்தால் திண்டிவனம் தொகுதி திராவிடம் உள்ளளவும் "தீரர்கள் சோலை" என்ற திருப்பெயரைப் பெறும்!

கோயங்கா வெற்றி பெற்றால் திண்டிவனத்திலே, விபீஷணர்கள் திரிகிறார்கள் என்ற அவச்சொல்லுக்கு ஆளாகும்!

திண்டிவனம் தொகுதி வாக்காளர்களே! உங்கள் ஆதரவு, திராவிடப் பிரச்னையை ஆதரிக்கும் திருக்குறள் முனிசாமிக்கா? வடநாட்டு ஏகாதிபத்ய பெருச்சாளி கோயங்காவுக்கா?

திண்டிவனம் தொகுதி வாக்காளர்களே! உங்கள் ஆதரவு சேரன் செங்குட்டுவன் பரம்பரைக்கா?

களங்க மூட்ட வரும் கனக விசயன் வம்சத்திற்கா?

சுயமரியாதை ரத்தப் சுழன்றோடிடும் சுத்ததிரா[illegible] [illegible] கள்!

வாழ்க திராவிடமானம்!

சுழல் விளக்கு

மாலுமி

சிறுவர்கள்!

ஜி. பி. சோமசுந்தரம் வயது சுமார் அறுவது! கே. கே. நீலமேகம் வயது சுமார் ஐம்பது! பொள்ளாச்சி நடராசு வயது சுமார் அறுபது! பெத்தாம்பாளையம் பழனிசாமி வயது ஏறக்குறைய நாற்பது! நெடுஞ்செழியன் சுமார் வயது முப்பது! சேலம் சித்தையன் வயது சுமார் நாற்பது! இ, வி. கே. சம்பத் வயது சுமார் இருபத்தேழு! சி. பி. சிற்றரசு வயது சுமார் நாற்பது; என் வி. நடராசன் வயது சுமார் நாற்பது! பார்த்தசாரதி வயது நிச்சயமாக ஏற்பத்திரெண்டு! அப்பாதுரையார் வயது சுமார் ஐம்பது! மணிமொழியார் வயது அநேகமாக ஐம்பத்திநாலு! எஸ், வி. லிங்கம்கிழவரே! மூதாட்டி ராமாமிர்தத்தம்மாள் முப்பது வயது! (இரட்டையில்) அரங்கண்ணல வயது சுமார் இருபத்திரெண்டு! ஈழத்து அடிகள் வயது சுமார் ஐம்பது! என் வயது சரியாக இருபத்தொன்பது!

மேற்கண்ட வரிசையிலே குறிப்பிடப்படும் வயதுகள் ஜாதகக் குறிப்புப்படியோ வருஷம், மாசம், தேதிப்படியோ கணிக்கப்பட்டவை அல்ல! பார்வையாலும் உத்தேசத்திலும் ஒன்றை இதற்கு முன்பு கேட்டிருந்த முறையிலும் [illegible] நினைவு வைத்[illegible]டவையாகும்! திடீரென்று என்னப்பா வயதுக்கணக்கில் புகுந்து விட்டாய் என்று கேட்கிறீர்களா? குறிப்பிடப்பட்டவர்களில் ஒருவர் இருவரைத்தவிர எல்லோருமே கல்யாணம் ஆன தோழர்கள் ஆனபடியால் திருமண அப்ளிகேஷன் என்று யாரும் தவறாகக் கருதவேண்டாம். அப்படிப்பட்ட 'விவாக விண்ணப்பம்' என்றால், வ[illegible]து [illegible]ளைக் குறைத்தல்லவா சொல்லியிருப்பேன். மேலேகுறிப்பிட்டவர்கள் எல்லோருமே சிறுவர்கள் என்று கூறினால் உங்களுக்கு சிரிப்பு வருகிறதல்லவா? ஆனால் நிச்சயமாக அவர்கள் இளைஞர்கள் தான்!

பெரியார் ராமசாமி அவர்கள் முன்பெல்லாம் அடிக்கடி சொல்லுவார்கள்; "எனக்கு வயதானால் கூட என் உள்ளம், இளைஞன் உள்ளந்தான்"; என்று! அதைப்போல இளைஞர் உள்ளங்கொண்டவர்கள்தான் தி மு கழகத்திலேயுள்ள, கிழவர் வாலிபர் எல்லோருமே அது மட்டுமல்ல; தி. மு கழகத்தின் சட்டதிட்டமே பதினெட்டு வயதுக்கு மேற்பட்டவர்களைத்தான் உறுப்பினராகச் சேர்க்க முடியும் என்று வகுக்கப்பட்டிருக்கிறது!

ஆனால் எந்தக்காரணத்தாலோ தெரியவில்லை; பாவம் ஜி. பி. சோமசுந்தரம், பொள்ளாச்சி நடராச, [illegible]

பட்டவர்கள் சர்க்கார் சட்டப்படி 'மைனர்' நீங்கிய கப்படுவார்கள், பதி பெரியவர்கள்! இதுகூடத் தெரியாமல் இவர்களை சிறுவர்கள் வன்று யாரும் அழைத்திருக்கமாட்டார்கள். சிறுவர்கள் என்றால் வயதான காலத்திலும் இளம் இதயம் மடைந்தவர்கள் என்று பொருள்! இளம் இதயம் படைத்தவர் என்றதம் நமது கிழவர் எஸ் வி. லிங்கம்! இவர் கள திருமணதிற்கு திட்டம் போடுவார் போல் தெரிகிறது! இல்லை இல்லை... விளையாட்டுக்குத்தான் சொல்கிறேன்! லிங்கம் அண்ணா! நீங்கள் இப்போது எங்கே இருந்தாலும் சரி; அப்படியெல்லாம் எந்த ஏற்பாடும் செய்து விடாதீர்கள்! நீங்கள் எங்கே ஏற்பாடு செய்யப்போகிறீர்கள் நீங்கள் தான் சாமியாராச்சே! உங்களுக்கு சொத்தா? சுகமா! வார்சா? மண்ணாங்கட்டியா?

வயதான தோழர்களே? உங்களில்சிலபேர் விட்டுப் போயிருக்கலாம்! ஆனால், நீங்கள் எல்லாம் சிறுவர்களோ என்று எண்ணி விடவேண்டாம்! இளம் இதய படைத்த பெரியவர்கள்! இளம் இதயம் இலட்சிய இதயம்! காதல் இதயமல்ல! ஓகோ கோ! ஒன்றை மறந்து விட்டேனே!

பார்லிமெண்ட் நெருக்கடி

பிரிட்டிஷ் எதிர்ப்புத் தூதுவரை அவதூறாக பேசியதற்கு

———(o)———

மன்னிப்புக் கோரும்வரை சபைக்கு வரக்கூடாதாம்

தெஹ்ரான், டிச 21—

பர்ஷிய பார்லிமெண்ட் மெம்பர்கள் 38 பேர் அதை பகிஷ்கரித்ததன் விளைவாக எழுந்துள்ள நெருக்கடியைத் தவிர்க்க பாரசீக ஷாவே தலையிடக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது இவர்கள் வராவிட்டால் மஜ்லிஸ் அலுவல்கள்நடத்தகுறைந்த பட்சம் அவசியமான தொகை மெம்பர்கள் அதில்இரார் பிரதம மந்திரி முஸாதிக்கை ஆதரிக்கும் இவர்கள் எதிர்க்கட்சி மெம்பர்கள். பிரிட்டிஷ் எதிர்ப்புத் தலைவரான அப்துல் காஸிமைத் தாக்கிப் பேசியதற்கு மன்னிப்பு கோரினாலன்றி சபைக்கு வரம் போவதில்லை என்று இந்த மெம்பர்கள் சபாநாயகருக்கு ஒரு எச்சரிக்கை நோட்டீஸ் அனுப்பியுள்ளனர்.

காங்கிரஸ் அரோகரா!

திருவாங்கூர் கொச்சி தேர்தல்

திருவனந்தபுரம், டிச. 21—

குன்னத்து நாடு பொதுத் தொகுதியிலிருந்து ராஜ்ய சட்டசபைக்கு சுயேச்சை அபேட்சகர் மத்தாய் தெரிந்தெடுக்கப்பட்டார் தற்போது சட்டசபையில் மெம்பராயிருந்த காங்கிரஸ் அபேட்சகர் சாக்கோ தோல்வியடைந்தார் இத்தொகுதியில்நின்ற அபேட்சகர்கள் இருவரே.

ஓட்டுக்கள் விவரம் வருமாறு;

மத்தாய் (சுயே)	1781[illegible]
என் வி சாக்கோ (கா)	12908
மொத்தம்	30721

இத் தொகுதியில் மொத்த ஓட்டர்களின் தொகை 88672794 சதவிகிதம் ஓட்டுகள் பதிவாகியுள்ளன.

கிராக்கிப் படி உயர்வு

பங்களூர் முனிஸிபல் சபை முடிவு

பங்களூர். டிச 20—

பங்களூர் முனிஸிபல் கார்ப்பொரேஷன் சிப்பந்திகளுக்கு டிசம்பர் 1-ந்தேதி முதல் கிராக்கிப் படியை மாதம் ரூபாய் 5 விதம் உயர்த்தவதென்று [illegible] மாலை நடந்த நகர [illegible] தீர்மானிக்[illegible]

தொழிலாளர் வீடு கட்டிக் கொள்ள வட்டியில்லாக் கடன்

மத்ய பாரத சர்க்கார் திட்டம்

இந்தூர், டிச 19—

தொழிலாளர்[illegible] வீடு கட்டிக்கொள்ள வட்டியில்லாமல் கடன் அளிப்பதற்கான திட்டமொன்றை மத்ய பாரத சர்க்கார் அங்கீகரித்துள்ளனர்.

அதன் பிரகாரம் அடுத்த 5 ஆண்டுகளில் இந்நகரில் சுமார் 1900 மனைகள் ஒதுக்கப்படும் தொழிலாளரும் சமபங்கு செலவழிக்கத் தயாராயிருந்தால்தான் கடன் உண்டு மாதத் தவணைகளில் அது வசூலிக்கப்படுமாம்.

முற்போக்கு வாலிபர் கழகம்

சாத்தன்குளம் முற்போக்கு வாலிபர் கழக செயற்குழுக்கூட்டம் 18-12-51 மாலை 4-30 மணிக்கு தோழர் ஆ சா அமீது தலைமையில் கூடியது. கூட்டத்தில், நடைபெற இருக்கும் சென்னை சட்டசபை தேர்தலில் சாத்தன்குளம் உடன்படி தொகுதிக்கு சுயேச்சையாகப் போட்டியிடும் தொழிற் சங்கத் தொண்டர் எம். ஆர். மேகநாதன் அவர்களை ஆதரிப்பதென முடிவு செய்யப்பட்டதாம்.

தி. மு. க. ஆதரவு பெற்றவர்களை

[illegible] தேர்த[illegible]

ஆதரியுங்கள்

சென்னை ராஜ்ய கடலில்முத்துபூச்சி வளர்ப்பு

சோதனை பலனளிக்கவில்லை

சென்னை டிச 21—

சென்னை ராஜ்ய கடற்கரையோரத்தில் முத்துச் சிப்பி வளர்க்க சர்க்கார் மீன் இலாகா நடத்திய சோதனையில் இதுவரை வெற்றி கிடைக்கவில்லையென்று தெரிகிறது பாரசீகக் குடாவிலிருந்து சில மாதங்களுக்கு முன்னால் 500 முத்துச் சிப்பிகள் கொண்டுவந்து பாம்பன் கடற்கரையோரத்தில் விடப்பட்டதாகவும் ஆனால் சீக்கிரத்திலேயே அவை இறந்துவிட்டதாகவும் சீதோஷ்ணம் காரணமாக அவை இங்கு ஜீவித்திருக்கவில்லை என்று தோன்றுவதாகவும் மீன் இலாகா டெப்டி டைரக்டர் வி. ஜான் பத்திரிகை நிருபர்களிடம் கூறினார்.

இந்தியா—பாக். போலீஸாருக்கிடையே கை கலப்பு

கல்கத்தா டிச 20—

ஜல்பாய்குரி ஜில்லாவின் பெருபாரி எல்லையில் பாகிஸ்தான போலீஸாருக்கும் இந்திய போலீஸாருக்குமிடையே நேற்று மாலை முதல் இன்று காலைவரை கை கலப்பு ஏற்பட்டது என்றும் இருதரப்பிலும் மாறிமாறிச் சுட்டனர். என்று அதிகாரபூர்வமான தகவல் கிடைத்திருக்கிறது. இந்தியர் தரப்பில் ஒருவருக்கும் விபத்தில்லை.

கூச்—பீஹார் ஜில்லாவில் கடயாளி என்னுமிடத்திற்கும் பாகிஸ்தானி போலீஸார் டிச. 18-ந் தேதி ஒரு ரவுண்டு இந்திய எல்லையிலுள்ள கான்ஸ்டபிளை நோக்கிச் சுட்டதாகவும் மற்றொரு தகவல் கூறுகிறது. [illegible]

கொரியச் சமாதானப் பேச்சு

டிசம்பர் 27-க்குள் ஏதாவது முடிவு ஏற்படும்!

வாஷிங்டன், டிச. 21—

இருண்மஸா குன் கொரியப் போரின் சமாதானப் பேச்சை பற்றிய முடிவு ஏதாவது ஏற்படும் என்று இங்கு எதிர்பார்க்கப்படுகிறது ஆனால் கம்யூனிஸ்டுகள் மட்டும் இன்னும் 80 நாட்கள் அவகாசம் கேட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

டிசம்பர் 27-க்குள் ஏதாவது முடிவிற்கு வராவிட்டால் என்ன செய்ய வேண்டும் என்பதை ஆலோசனை செய்ய கொரியாவில் துருப்புகளை அனுப்பியுள்ள 16 நாடுகள் இங்குசந்திக்கின்றன

பர்மாவுக்கு [illegible] ஏற்றுமதி செய்வோர் கவனிக்கவும்

இங்கு பருத்தி நூல் வாங்குகின்ற ஜெனரல் ஏஜண்டாக மெஸார்ஸ் ராமச்சந்திர மக்கள் மாஸ் கம்பெனியாரை ரங்கூன் சிவில் சப்ளை மானேஜ்மெண்ட் போர்டு நியமித்திருப்பதாகவும் பர்மாவுக்கு நூல் ஏற்றுமதி செய்ய கோட்டா பெற்றிருப்பவர்கள் மேற்படி கம்பெனியுடன் தொடர்பு கொள்ள வேண்டுமென்றும் ஏற்றுமதி கூட்டுப் பிரதம கண்ட்ரோலர் அறிவித்துள்ளார்.

நமது பட்டியல்

திருச்செங்கோடு தொகுதி பார்லிமெண்ட் ஸ்தானத்துக்கு டாக்டர் சுப்பராயனை எதிர்த்து நிற்கும்,

தோழர் பேபி என்ற கந்தசாமி அவர்கள் தி. மு. க. ஒப்பந்த ஏட்டில் கையெழுத்திட்டு, தேர்தலில் தி. மு. கழகத்தின் ஆதரவைப் பெற்றுள்ளார்.

மதுரை மாவட்டம் பழனி தொகுதியில் தோழர் மங்கல கவுண்டர் அவர்களை தி. மு. கழகம் தேர்தலில் ஆதரிக்கிறது.

ஆசிரியர்ஸ்டிரைக் ஒத்திவைப்பு

பம்பாய் டிச. 21...

இம்மாதம் 24-ந்தேதி ஆரம்பமாகவிருந்த இந்த ராஜ்ய ஆரம்ப பள்ளி ஆசிரியர்களின் ஸ்டிரைக் காலவரையறையின்றி ஒத்திப்போடப்பட்டுள்ளது. ஆரம்ப பள்ளி ஆசிரியர் சம்மேளனம் அமைத்த நடவடிக்கை கமிட்டியின் அவசர கூட்டம் இவ்வாறு இன்று முடிவு செய்தது சர்க்காரின் அடக்குமுறை நடவடிக்கைகளுக்குமுன் இதைத் தவிர்த்த ஆசிரியர்களுக்கு வேறு வழியில்லை என்று அது நிறைவேற்றிய தீர்மானம் கூறுகிறது.

கென்யாவில் தனித்தொகுதி சட்டம்

நைரோபி, டிச 20—

ஹிந்து, ஆப்பிரிக்க, அரபு மெம்பர்களின் கடும் ஆட்சேபத்துக்குப் பிறகு முஸ்லிம்கள் முஸ்லிமல்லாதார் என்ற ரீதியில் வாக்காளர் ஜாபிதா தயாரிக்கக்கோரும் மசோதா கென்யா சட்டசபையில் நிறைவேறியது

அணுசக்திவிபத்து

லண்டன் டிச 20—

அணுசக்தி கலந்த தண்ணீரை ஏற்றிக்கொண்டு சென்ற ஒரு லாரி இன்னொரு லாரியுடன் மோதி நேற்று விபத்திற்குட்டது கீழே சிதறிய தண்ணீரினால் அச்சம் ஏற்படுமுன் ஆட்கள் வந்து மாற்று மருந்தைத் தூவினர்.

பந்தோபஸ்து கௌன்சிலுக்கு கிரீஸ் தேர்தல்

பாரிஸ், டிச 20—

19 முறை வோட்டெடுப்புக்குப் பின்பு ஐ நா, பந்தோபஸ்துக் கௌன்சிலுக்கு கிரீஸ் மெம்பராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

தொழிலாளிகளின் நிலையும் அவர்கள் பிரச்னையும்.

சர்வதேச தொழிலாளர்கள் அங்கத்தினர் யோசனை கமிட்டியின் மாநாடு

புதுடில்லி, டிச. 21—

சம்பளம் பெறும் தொழிலாளிகளின் நிலை, ஆரோக்கியம் அவர்கள் வேலை செய்யும் ஸ்தலங்களின் சூழ்நிலை ரேடியோ டெலிவிஷன் புரோக்கிராம்களில் கலந்துகொள்ள பூரண சுதந்திரம் முதலியவைகளை ஆலோசிக்க ஜினிவாவில் அடுத்த பிப்ரவரியில் ஒரு மகாநாடு நடைபெறும் இம்மகாநாடு சர்வதேச தொழில் சங்கத்தின் யோசனை கமிட்டி ஆதரவில் நடைபெறுகிறது, யாதாஸ்து இச்சங்கம் தயார் செய்துள்ளது அது கூறுவதாவது:—

தொழில் அபரிமிதமாக உள்ள நாடுகளில் கூடும் தொழிலாளிகள் இல்லாதவர் மட்டும் 30 சதவிகிதம் இருக்கின்றனர். இவர்களின் எண்ணிக்கை இப்பொழுது அதிகரித்து வருகின்றது இவர்களின் பிரச்னைகள் சர்வதேச பிரச்னைகளாக விளங்குகின்றன. இதை தீர்ப்பதற்கு எல்லா நாடுகளும் திட்டமிட முன் வர வேண்டும்.

கமிட்டியில் கீழ்கண்டுள்ள நாடுகள் தங்கள் பிரதிநிதிகளை அனுப்பியுள்ளன;- பிரேஸில், சிலி, ஜெகாஸ்லோவாக்கியா, எகிப்து, பிரான்ஸ், இந்தியா, இத்தாலி, பெரு, போலாந்து, ஸ்விடன், பிரிட்டன், யு. எஸ். வருகுவாய்.

அந்தமானில் சூதாட்டவிடுதிகள் தடுப்பு

புதுடில்லி, டிச 20—

அந்தமான் நிகோபர் தீவுகளில் சூதாட்ட விடுதிகள் நடத்தக்கூடாதென்று ஜனாதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளார். இவ்வுத்தரவை மீறுவோர். முதல் குற்றத்திற்கு ரூ 500-க்கு மேற்படாமல் அபராதமும், 3 மாத சிறை தண்டனையும் விதிக்கப்படுவார் பிறகு புரியப்படும் குற்றங்களுக்கு ரூ 1000 மும், 6 மாத சிறை தண்டனையும் விதிக்கப்படும். யாரையும் வாரண்டில்லாமல் கைது செய்யவும் சூதாட்ட உபகரணங்களைக் கைப்பற்றவும் போலீஸாருக்கு அதிகாரமுண்டு,

நேருவின் ஆந்திராவிற்கு வருகிறார்

மந்திரி ராஜாவுக்கும் அழைப்பு

விஜயவாடா, டிச 20—

ஆந்திராவில்பண்டித ஜவஹர்லால் நேரு டிஸம்பர் 26, 27தேதிகள் சுற்றுப் பிரயாணம் செய்யும் பொழுது, உடன் செல்ல முதன் மந்திரி பி. எஸ். குமாரஸ்வாமி ராஜாவுக்கு ஆந்திரக் காங்கிரஸ் அமைப்பு விடுத்திருக்கிறதாகத் தெரிகிறது.

இந்திய சர்க்கார் டிரஷரி உண்டியல் விற்பனை

சென்னை, டிச. 18—

16-ந் தேதியோடு, முடிவடைந்த வாரத்தில் இந்திய சர்க்கார் டிரஷரி உண்டியல்களில் 66875000 ரூபாய் பெறுமானவை ரிசர்வ் பாங்கிற்கு விற்கப்பட்டன.